பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸு ஆவணி மீ 25 உ. திங்கட்கிழமை (10-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 20 கதிர்: 190

# 10 ஆயிரம் ஈழத்தமிழர் ஜோர்தானில் தவிப்பு!

## உணவு, சுகாதார வசதியின்றி வெயிலில் கிடந்து காய்கிறார்கள்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 10

குவைத்தில் இருந்து வெளியேறிய சுமார் பத்தாயிரம் தமிழர்கள் ஜோர்தான் எல்லையில் சிக்குண்டு தவிக்கிறார்கள்; பாலைவனத்தில் பட்டினி கிடக்கிறார்கள்; ''பெற்-சீற்''றுகளைக் கொண்டு கூடாரம் அமைத்து வெயிலில் கிடந்து காய்கிறார்கள்.

அங்கு பட்டினி கிடந்து கஷ்டப்பட்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தமிழர் ஒருவர் இந்த விவரங்களை உதயனுக்குத் தெரிவித்தார்.

புங்குடுதீவைச் சேர்ந்த அடைக்கலமுத்து ஜீவரத்தினம் (29 வயது) என்பவரே இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குவைத் மீது ஈராக் ஆகஸ்ட் 2 ஆம் திகதி ஆக்கிரமிப்பு நடவடிக்கை எடுத்ததை அடுத்து அங்கிருந்த ஒரு லட்சத்து 15 ஆயிரம் இலங்கையர்களில் அனேகமானோர் கையில் பணமில்லாததால் பட்டினி கிடக்க நேரிட்டது

அங்கு வேலை பார்த்த 45 ஆயிரம் தமிழர்களில் 11 ஆயிரத்து 300 பேர் 20 ஆம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்தில் ஓடிய 'யாழ்ப்பாணம்'பஸ்

யாழ்ப்பாணம். செப் 10

குவைத்தில் ''யாழ்ப்பாணம்'' என்று பலகை மாட்டி பஸ் ஓடியது!

குவைத்திலிருந்த ஈழத் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு அங்குள்ள பஸ்களை எடுத்து தாங்களே செலுத்தி வந்தனராம்.

அந்த பஸ்களில் பஸ் செலுத்தும் இடத்தைக் குறிக்கும் பலகையில் 'யாழ்ப்பாணம்' என்று எழுதப்பட்டிருந்தது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்திலும் ஷெல் தாக்கி சுழிபுரவாசிகள் 2 பேர் பலி!

குவைத் மீது ஈராக் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி சுழிபுரத்தைச்சேர்ந்த இருவர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டன.

சீக்கோ வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினரின் வீட்டில் தங்கியிருந்த அவர்களது உறவினர்களே அந்த வீட்டில் ஷெல் விழுந்தபோது உயிரிழந்தனர். [உ-3]

## குடியிருப்புகள் மீது இரவில் விமான குண்டு வீச்சு! தந்தை மகள் பலி!

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்பாணம் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு முதல் காலை வரை மாறி, மாறி விமானக் குண்டு வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரவில்நடந்த இத்தாக்குதலில் யாழ். நகரம் அதிர்ந்தது. நகர மக்கள் குண்டுகள் எங்கு விழுகின்றன என்று தெரியாமல் பதைபதைத்தனர்.

குடியிருப்புப் பகுதிகள் மீது இரவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல்கள் காரணமாக இருவர்உயிரிழந்தனர். பெரும் உடைமைச் சேதங்களும் ஏற்பட்டன.

முதலில் இரவு 10. 20 மணிக்கும் பின்னர் நள்ளிரவு 1. 30 மணிக்கும் மீண்டும் அதிகாலை 4 மணிக்கும் விமானம் குண்டுகளைப் பொழிந்து நகரை நடுங்க வைத்தது

அன்னசத்திர ஒழுங்கையில் வீழ்ந்த குண்டிலேயே தந்தையும், மகளுமாக இருவர் உயிரிழந்தனர்.

கோ. இராசப்பு (வயது55), அவரது மகள் இ. சித்திரா (வயது 23) ஆகிய அந்த இரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவும் நகரின் மீது விமானக் குண்டு வீச்சு!

யாழ். நகரில் நேற்றிரவும் குடியிருப்புப் பகுதிகள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் 8 15 மணியளவில் நகருக்கு வந்த விமானம் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசியது. குண்டுகளின் அதிர்வினால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின.

செய்தி அச்சுக்குப் போகும் வரை சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஒ)

## அம்பாறையில் 200 தமிழர் 27 நாட்களில் படுகொலை

யாழ்ப்பாணம், செப். 10

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலகட்டத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் விசேட அதிரடிப் படையினராலும் முஸ்லிம் கும்பல்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ - ஸ்ரீலங்காப் போர் ஆரம்பத்தில் இருந்து இதுவரை 1879 அப்பாவித் தமிழர் அங்கு படுகொலையாகியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கடந்த முதலாம் திகதி விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இந்த அறிக்கையின் முழு விவரமும் நாளைய உதயனில் வெளியாகும்) (உ)

## நகரில் நேற்றுக் காலையும் இரண்டு பேர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ் நகரில் நேற்றுக்காலை 10 மணியளவில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சிலும் வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் பலியாகினர்,

அரசடி வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்திக்குச் சமீபமாக —'கராஜ் ஒன்றின் அருகில்— வீழ்ந்த குண்டினால் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளரான அத்தியடியைச் சேர்ந்த ஆறுமுகம் பரமேஸ்வரன், பொன்னுத்துரை வத்சலா தேவி (வயது 28) ஆகிய இருவரும் உயிரிழந்தனர்;

இன்னும் சிலர் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்தக் குண்டு வீச்சினால் 'கராஜ்ஜில் நின்ற வாகனங்களும். அருகிலுள்ள சில வீடுகளும் சேதமடைந்தன. (ஒ-7)

## வடக்கு - கிழக்கு இணைப்பு; ஐ.தே.க., சு.க. எதிர்ப்பு

கொழும்பு, செப். 10

வடக்கு-கிழக்கு மாகாணத்தைநிரந்தரமாகஇணைப்பதற்கு பதினொரு அரசியல் கட்சிகள்ஆதரவளிததுள்ளன.

நிரந்தர இணைப்பு பற்றி முடிவு செய்ய சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை இக்கட்சிகள் எதிர்த்துள்ளன.

இதேவேளை—

நிரந்தரமாக சர்வசன வாக்கெடுப்பின்றி இணைப்பதற்கு ஆளும் ஐக்கியதேசியக் கட்சியும் பிரதானஎதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

அதிகாரப்பரவலாக்கல் பற்றி ஜனாதிபதி அனுப்பிய கேள்விக்கொத்துக்கு அரசியல் கட்சிகள் அனுப்பிய பதில்களில் இருந்து முன்கண்ட விவரம் வெளியாகியதாக இந்திய வானொலி தெரிவித்தது. (அ-எ)

## மீண்டும் வந்த 'சகடை' யாழ். நகரில் மூர்க்கம்!

யாழ்ப்பாணம், செப்.10

நான்கு இயந்திரங்களைக் கொண்ட சீனத்தயாரிப்பான 'சகடை' விமானம் நேற்று மீண்டும் யாழ்நகருக்கு வந்து 'மூர்க்கம்' புரிந்தது.

கடந்தமாதம் யாழ் நகரில் மனிதவேட்டை நடத்தி, பலரது உயிரை இந்தச் 'சகடை' பறித்திருந்தது.

கடைசியாக கடந்த மாதம் [ஆகஸ்ட்] 9ஆம் திகதி யாழ் நகரில் குண்டுவீச்சு நடத்தி, ரயில் நிலையத்தைத் தகர்த்து விட்டுச்சென்றதன்பின்னால்- சரியாக ஒருமாதத்தின் பின்னர் — அதேதிகதியில் நேற்று இந்த [illegible] வந்து அனர்த்தம் புரிந்தது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இரசாயனக் குண்டுவீச்சு; விடுதலைப் புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 10

கோட்டை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் இரசாயனக் குண்டு வீச்சை நடத்தியுள்ளார்கள் என்ற சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

இதுதொடர்பாக விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில்-

உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு உலக சமூகத்தைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டு தனது தமிழ் இன அழிப்புச் சித்தாந்தத்தை சிறிலங்கா அரசு கனகச்சிதமாகச் செய்து கொண்டுவருகின்றது என்று

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழித்தீன்

நாம் தரமான கோழித்தீன் வகைகளை செய்து கொடுக்கிறோம். சிவாமில் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண்வீதி. 4ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (14159)

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### டவர் வோச் வேக்ஸ்

எமது ஸ்தாபனத்தாரிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவறின் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனை அறியத் தருகின்றோம். தொடர்பு: கோபால கிருஷ்ணன். 234/4, மானிப்பாய் வீதி, சென் செபஸ்தியார் லேன், (ஓட்டுமடம் சந்திக்கருகாமை)யாழ்ப்பாணம். (இதுவே இறுதி அறிவித்தலாகும்) (14156)

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கவும், அடையாள அட்டைகள் கவறிட்டுக் கொள்ளவும், கிளீன்கட், 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14169]

### தவறிவிட்டது

நல்லூரடியில் மார்க்கண்டு கோணேசன் [பெரிய போரதீவு] பெயருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [14097]

## பூநகரிக்கு 4லொறிகளில் மா

யாழ்ப்பாணம், செப். 10

பூநகரியில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவென நேற்று முன்தினம் 4 லொறிகளில் 40 மெற்றிக் தொன் மா கொண்டுவரப்பட்டது.

பூநகரிப் பகுதியில் நிவாரண வேலைகளை மேற்கொண்டு வரும் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த தொண்டர் அமைப்பு ஒன்றே இந்த மாவை அனுப்பியுள்ளது. [ஓ-5]

## ஸ்கந்தபுரத்தில் ஹெலி தாக்கி பெண் காயம்

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் அண்ணா சிலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஹெலி ஒன்று கடும் தாக்குதல் நடத்தியது.

குடியிருப்பு பகுதியைநோக்கி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலால் பெண் ஒருவர் காயமடைந்தார். (ஓ-76)

## யாகம்

கோப்பாய், செப். 10

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் நாட்டின் அமைதி வேண்டியும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவும் யாகம் நடைபெற்றது.

(இ - 72)

இறந்தவர்களின் சிறிய படங்களைப் பெரியதாக்க விரும்புகிறீர்களா?
[Re - Copy, Enlargment, Framing & Blocks]
உடனே நாடுங்கள்
கொழும்பு ஸ்ருடியோ
245, நாவலர் வீதி,
[ரெயில்வே கடவைக்கு அண்மையில்]
யாழ்ப்பாணம்.
[சி-5190]



மில்க்வைற்
சலவைப்பவுடர்
மில்க்வைற் சலவைப் பவுடர் நூலிழைகளின் ஊடே விரைந்து செயற்பட்டு அழுக்கை அறவே அகற்றுகிறது துணிகளுக்குத் தீங்குஏற்படாது பாதுகாக்கிறது வெண்மையும் பிரகாசமும் தருகிறது சலவையைத் துரிதமாக்குகிறது.
50 கிறாம் பக்கற்
விலை ரூபா 3.00 மட்டுமே.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(சி-5191)

## 4ஆம் ஆண்டு இதய அஞ்சலி

செல்வி
**சத்தியபாமா விஸ்வலிங்கம்**
[முன்னாள் ஹற்றன் தேசிய வங்கி உத்தியோகத்தர்]

மாதா மடியில்: 03 - 03 - 1956
மகிழ்நன் அணைப்பில்: 25 - 08 - 1986

திதி: 10 - 09 - 1990

பண்டுபுகழ் சூரியகுமரனொடு மன்றல் வேட்க
பண்பட்ட பாச மொடு பாங்காக நீர் விரைந்திர்
கண்பட்ட தென்றே கவலையுறுமுற்றோரும்
உறவினரும்
விண்புக்க நும்மை விரையூட்டி மலர்தூவி
வந்திப்போமே!

அல்லும் பகலும் அல்லலுறும்;
அன்னை, அத்தை, ஐயா, அக்காமார்,
அத்தான்மார், தம்பி, தங்கை, சுற்றத்தவர்.

'யமுனா'
ஆனைக்கோட்டை. [14153]

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இரத்தினாம்பிகை நல்லையா**

பிறப்பு: 12 - 05 - 1916
இறப்பு: 14 - 09 - 1976

திதி: 10 — 09 — 1990

அன்புத் தெய்வமே!
தங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரன், பேர்த்திகள்.

195, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். [14166]

## ஓராண்டு நினைவாக....



உதயம்: 25- 10- 1947

அஸ்தமனம்: 10- 09- 1989

அமரர்
**மரியாம்பிள்ளை மேரி ஜோசப் ஜெயராசா**

''உங்கள் உயிர் கிறீஸ்துவோடு...... கடவுளுக்குள் மறைந்துள்ளது'' (சொலோ 3:3)

வாழ்வு ஒரு போராட்டம்!
வாழ்ந்து காட்டி ஜெயித்தராஜா!
தாழ்வு மனப் பான்மையின்றி
தாரணிக்கோர் தலைவனானீர்!
ஏழ்மை வாழ்வு கொண்டோர் மட்டில்
ஏணிப்படியாகி நின்றீர்!
கோழை மனம் கொண்டோர் உம்மை
கொன்று விட்டார்- அனுபவிப்பார்!!!

துன்புறும்:
மனைவி, தாய், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (14165)

# மரண அறிவித்தல்கள்

### சுப்பையா குமாரசாமி

(முன்னை நாள் ஆசிரியர் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலை)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சுப்பையா குமாரசாமி 27-08-90 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் பக்த வத்சலாதேவியின் (அவுஸ்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பையா இராசம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற மயில்வாகனம் (இளைப்பாறிய ஆசிரியர்), தங்கம்மா (இளைப்பாறிய ஆசிரியை, அவுஸ்) ஆகியோரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரரும், ஜனனி (அவுஸ்), விமலினி (அவுஸ்.), காலஞ்சென்ற சிவாஜினி, வாசுகி (அவுஸ்) முருகானந்தன் (அவுஸ்), தர்மினி (அவுஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவரட்ணம் (அவுஸ்), விஜயவிக்னேஸ் (அவுஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசுப்பிரமணியம் (அவுஸ்) Dr தணிகாசலம் (கோண்டாவில்), ஏகாம்பரேஸ்வரி, திலகேஸ்வரி (அவுஸ்), ருக்மணி காந்தன் [அவுஸ்], வள்ளிநாயகி [அவுஸ்], Dr சின்னத்துரை [ஏழாலை] ஆகியோரின் அன்பு மைத்துனரும். கிருஷ்ணமூர்த்தி [வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, காங்கேசன்துறை] Dr. வசந்தி [அவுஸ்]. இராஜேஸ்வரி [ஆசிரியை ஏழாலை ம. வி], செல்வயோகன் [அவுஸ்.], கலா இந்திரை [அவுஸ்], சிவேந்திரன் [அவுஸ்] ஆகியோரின் சகலனும், சேந்தன், இராகுலன் [அவுஸ்], மயூரன் [அவுஸ்.]. ஆகியோரின் மாமனாரும், துவாரகா, குகானந்தன், காயத்திரி, அமலா [அவுஸ்]. நிருபன் [அவுஸ்] ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன. இவ்வறித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். [13851]

தகவல்;
ம. தணிகாசலம்

### அமரர் சுப்பையா நடராசா

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையை சேர்ந்த திருவாளர் சுப்பையா நடராசா அவர்கள் 09-09-1990 அன்று காலமாகி விட்டார். அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதீசனின் [நல்லூர் ப.நோ. கூ. ச. விற்பனையாளர்), அன்புத் தந்தையும் திருவாளர் முத்துலிங்கத்தின் அன்புச் சகோதரரும், சத்தியேஸ்வரன், சரஸ்வதியின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10-09-1990 (திங்கள்) இன்று காலை 8 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
ந. ஜெகதீசன் [மகன்]

''ஜெகபவனம்''
25, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [14171]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் சிறுபோக செய்கை; உற்பத்தி அரைவாசியாக வீழ்ச்சி!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெல் உற்பத்தி அரைவாசியாகவீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த காலங்களில் சாதாரணமாக ஏக்கருக்கு 60 புசல் நெல் விளைச்சல் கிடைப்பது வழக்கம்.

ஆனால் இம்முறை ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 30 தொடக்கம் 35 புசலாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உரவகைகள், கிருமி நாசனிகள் போதியளவு கிடைக்காமல் போனதே உற்பத்தி வீழ்ச்சி அடையக் காரணம் ஆகும். (இ - 3 - 6)

## மட்டக்களப்பு மாவட்டத்திலும்
# நிவாரணம் வழங்குவதற்கு பொருள்கள் இல்லையாம்!

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு மாவட்டத்திலும் நிவாரணம் வழங்குவதற்கு உணவுப் பொருள்கள் இல்லையாம்.

கடந்த மூன்று மாதங்களாக இம்மாவட்டத்திலுள்ள பாமர மக்களுக்கு உணவு முத்திரைகள், ஜனசக்தி நிவாரணம்தானும் வழங்கப்படவில்லை.

ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்பட்டோர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 315 ரூபா பெறுமதியான நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும் என சமூகசேவைப்பணிப்பாளரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போதிலும்—

இம்மாவட்ட மக்களுக்கு 90 ரூபா பெறுமதியான பொருள்களே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொருள்களும்கூட சில பகுதிகளில் வழங்கப்படவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகிறது (ஒ)

# வங்கிகள் திறக்கப்பட்டால் ஆகஸ்ட் மாதச் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 10

வங்கிகள் திறக்கப்பட்டால் ஆகஸ்ட் மாதச் சம்பளம் அடுத்த வார இறுதிக்குள் வழங்கப்படும்.

ஆசிரியர்களுக்கும், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் ஆகஸ்ட் மாதச்சம்பளம் வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஊழியர் வரவு குறைவாக இருக்கின்றபடியால் வேலைகள் தாமதமாவதாகக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

காசோலைகள் தயாரிக்கும் வேலை முடிந்தாலும் வங்கிகள் இயங்கிய பின்பே சம்பளம் வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ - 3 - 6)

## மயிலிட்டி
# மார்பு நோய் ஆஸ்பத்திரி 3 மாதமாக இயங்காத நிலை

வல்வெட்டித்துறை, செப். 10

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை கடந்த மூன்று மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

இதனால் இங்கு கடமையாற்றிய ஊழியர்கள் தத்தமது பகுதியில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகிறார்கள்.

இவ்வூழியர்களுக்கு ஜூன் மாத முற்பணமாக ஆயிரம் ரூபா மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் போதனா வைத்தியசாலையை வேறு இடத்தில் இயங்கச் செய்தது போல மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையையும் வேறிடத்தில் இயங்கச் செய்தால் மார்பு நோயாளரின் மரண வீதம் அதிகரித்து வருவதைக் கட்டுப்பண்ண முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

(இ-160)

# 45 ஆயிரம் அகதிகளுக்கு 15 மலசல கூடங்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியுள்ள சுமார் 45 ஆயிரம் அகதிகள் 15 மலசல கூடங்களைத் தான் பாவித்து வருகின்றனராம்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தலைமையிலான அரசியல் கட்சிகளின் தூதுக் குழு ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை கடந்த சனிக்கிழமை நேரிற் சென்று பார்வையிட்டது.

அப்போது, தான் இந்த அவல நிலை தெரியவந்ததாம். [இ-எ]

# சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுக்கள்

கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள கார்ட்டுகள் சில உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு:-

607492921 V வீரசிங்கம் செல்வராணி - வட்டு கிழக்கு, 510922280 V சண்முகம் பவளராசா - சங்கானை, 096620489 V அன்னபூரணம் சணபதிப்பிள்ளை - புங்குடு தீவு மேற்கு, 670921700 V சோமசுந்தரம் தர்மராசா - காரைநகர் கிழக்கு, 375521431 V நவமணி குமாரசாமி - அளவெட்டி, 626992048 V இராஜகோபால பிள்ளை கமலாசனி - சரவணை, 711811516 V அந்தோனி பெர்னாண்டோ அந்தனி கிறிஸ்டோபர் - மிருசுவில், 585040703 V பேரம்பலம் வனிதா - சரவணை, 542090995 X எஸ். செந்தில்வேல் - கொழும்பு - 2.

## விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, செப். 10

மட்டுவில் மகளிர் வித்தியாலய அகதிகள் முகாமில் உள்ள சிறுவர்களை உற்சாகப்படுத்துமுகமாக இந்து இளைஞர் மன்ற ஒன்றியம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசில்களை வழங்கியது. யாழ். மாவட்ட ஒன்றியத் தலைவர் திரு. தனபாலன் பரிசில்களை வழங்கினார். [இ-31]

## 10 ஆயிரம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி அங்கிருந்து புறப்பட்டு ஈராக் ஊடாக ஜோர்தான் சென்றனர்.

அவர்களில் ஆயிரத்து 300 தமிழர் மட்டுமே ஜோர்தானினுள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எஞ்சியோர் ஜோர்தான்-ஈராக் எல்லையில் பாலைவனத்தில் அநாதரவாக விடப்பட்டுள்ளனர்.

அவர்கள் தாம் கொண்டு வந்த படுக்கை விரிப்புகளை (''பெட்சீற்''றுகளை) கூடாரமாக்கித் தங்கியுள்ளனர். அவர்களுக்கு ஒரு நேரம் றொட்டியும், மட்டுப்படுத்தப்பட்ட அளவு தண்ணீருமே கொடுக்கப்படுகிறது.

அவர்கள் சுகாதார வசதியின்றியும், வெயிலில் கிடந்தும் காய்கிறார்கள்.

அதே வேளை—

ஜோர்தான் நகரில் அம்மான் நகர் முகாமிலும், இலங்கைத் தூதரகத்திலும் 1,300 பேர் தங்க வசதி செய்யப்பட்டது.

இலங்கை அரசாங்கம் எம்மை அழைக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஐ. ஓ. எம். அமைப்பு International Organization for Migration) எம்மை அங்கிருந்து இலங்கை அழைத்து வந்தது. தினமும் ஒரு விமானசேவை நடாத்தப்படுகிறது. ஒருதரம் 182 பேர் மட்டுமே அழைக்கப்படுகிறார்கள்.

கொழும்பு வந்து சேர்ந்தது எமக்கும் பாஸும் 150 ரூபாவும் வெளிவிவகார அமைச்சால் தரப்பட்டன இவ்வாறு அவர் கூறினார், (உ-3-5-6)

## குடியிருப்புகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் படுகாயமுற்ற நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமாகினர்.

இக் குண்டுவீச்சினால் இ தவமணி (வயது 50), ரீட்டா (வயது 21), காமினி வயது 40) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்து மகளிர் கல்லூரிக்குப் பின்புறம் ஆத்திசூடி வீதிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டினால் ஐந்துக்கும் அதிகமான வீடுகள் முற்றாக சேதம் அடைந்தன.

யாழ். மாநகரசபையின் பின்புறமுள்ள தென்னந் தோப்பில் வீழ்ந்த குண்டினால் சங்கிலியன் வீதிப் பகுதியிலுள்ள ஐந்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

[ஒ - 7 - 143 - 5 - 6]

## இரசாயனக் குண்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்ட விதத்திலேயே நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எந்த ஒரு கட்டத்திலும் ஸ்ரீலங்கா அரசு கூறுவது போல இரசாயன ஆயுதங்களை நாம் பிரயோகிக்கவில்லை

ஆனால் ஸ்ரீலங்கா அரசு இதற்கு நேர்மாறான விதத்தில் நடந்து கொள்கிறது.

சர்வதேச போர் விதிகளுக்கு முரணாக வைத்தியசாலைகள், அகதிமுகாம்கள், ஆலயங்கள், பாடசாலைகள் மீதும், பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதும் ஸ்ரீலங்கா அரசபடைகள் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

இன்று எமது மண்ணிலேயே இருந்து கொண்டிருக்கின்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற உலக அமைப்புக்களே ஸ்ரீலங்கா அரசின் இந்த அடாவடித்தனங்களுக்கு சான்று பகரும்.

மேலும் துர்நாற்றத்தை வெளிப்படுத்தும் ஒரு வகை இரசாயனக் குண்டுகளை ஸ்ரீலங்கா அரசின் விமானங்கள் யாழ் குடாநாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது வீசிவருகிறது.

—இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## குவைத்தில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் ஆட்சேபித்தனர் என்றும்—

''ஸ்ரீலங்கா'' என்று தான் போடப்பட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ''யாழ்ப்பாணம்'' பலகை மாற்றப்படவில்லை. [உ-3]

## மீண்டும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 5 மணியளவில் வந்த 'சகடை' விமானம் யாழ் நகருக்கு மேலாக - மிகவும் தாழ்வாக-ஒரே சீரான வேகத்தில் பறந்து அடுத்தடுத்து எட்டுக் குண்டுகளை வீசித் தள்ளியது.

அவற்றில் ஏழு குண்டுகள் பெரும் சத்தத்துடன் வெடித்தன. இதனால் நகரம் அதிர்ந்தது குருநகர்ப் பக்கமாக விழுந்த ஒரு குண்டு வெடிக்கவில்லை. எட்டுக் குண்டுகளும் குருநகர்ப் பகுதியிலும், நகரின் ஏனைய பகுதிகள்மீதும் வீழ்ந்துவெடித்தன.

இந்தச்செய்தி எழுதப்படும் போது சேதவிவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (ஒ)

## தபால் பொதிகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், செப் 10

யாழ் மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட கடிதங்கள் அடங்கிய 40 பொதிகள் நேற்று பருத்தித்துறைக்கு அனுப்பப்பட்டன.

இன்று மாலை பருத்தித்துறையிலிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படும் ''ரிங்கோ றேடர்ஸ்'' கப்பலில் இவை எடுத்துச் செல்லப்படவுள்ளன. (ஒ-5)

## சமூக சேவை ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.10

யாழ். செயலக சமூக சேவைத் திணைக்கள ஊழியர்கள், மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களை திங்கள் (இன்று) செவ்வாய்க் கிழமைகளில் காலை 10 மணிக்கு காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு பிரதிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். [ஒ]

## வேலணை தபாலக ஊழியருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 10

வேலணை தபால் நிலையத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் நாளை செவ்வாய்க் கிழமை காலை ஒன்பது மணிக்கு சுன்னாகம் தபால் நிலையத்தில் சமுகமளிக்குமாறு வேலணை தபால் நிலைய அதிபர் திரு. எஸ். சிவராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [ஒ-3]

## திருமலைக்கு தூதுக் குழு

யாழ்ப்பாணம், செப். 10

16 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட தூதுக் குழு நேற்று முன் தினம் திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்து இராணுவ மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உணவு நிலை குறித்து ஆராய்ந்தது. [அ-3]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் செல்வி இ. திலகவதி
[சாந்தா]

தோற்றம்:
08 - 04 - 1947

மறைவு:
11 - 08 - 1990



எமது பாசமிகு செல்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் 08 - 09 - 1990 சனிக்கிழமை நடாத்தப்பெற்று வீட்டுக் கிருத்தியம் 10 - 09 - 1990 திங்கள் [இன்று] வீட்டில் நடைபெற உள்ளது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அம்மா, சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

13/2. தலையாளி ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம். [14172]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா முகாமில் 20 இளைஞர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 10

வவுனியா ஜோசப் இராணுவ முகாமில் இருபதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் சிலர் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் 'டயர்'போட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5-6)

# முல்லைத்தீவுக்கான மருந்து பருத்தித்துறையில் தேக்கம்

யாழ்ப்பாணம், செப்.10

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்ட மருந்துவகைகள் பருத்தித்துறையில் தேங்கிக்கிடக்கின்றன.

கப்பல்மூலம் அனுப்பப்பட்ட மருந்து வகைகள் அங்கு இறக்க முடியாததால் பருத்தித்துறையில் இறக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், நெடுங்கேணி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டை நீக்க இந்த மருந்து வகைகளை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ-3]

# தீவுப் பகுதிக்குச் செல்ல போக்குவரத்து வசதி

யாழ்ப்பாணம், செப். 10

சுகாதாரசேவை ஊழியர்கள் தீவுப் பகுதிக்கு செல்ல போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தீவுப் பகுதி வைத்தியசாலைகளிலும், மருந்தகங்களிலும் கடமையாற்றிய ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் தற்சமயம் யாழ்ப்பாணத்தில் உள்ளனர்.

போக்குவரத்து வசதி இன்மையே அவர்கள் அங்கு செல்லாததற்கு காரணம்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரும், யாழ் செஞ்சிலுவைச் சங்கமும் செய்துள்ளன.

அங்கு செல்ல விரும்பும் ஊழியர்கள் சுகாதாரப் பணிப்பாளருடன் அல்லது யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துடன தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

# ஒரு லட்சத்து 6 ஆயிரம் அகதிகள் தமிழகத்தில்

## மேலதிக வசதிகளுக்கு ஏற்பாடு

சென்னை, செப்.10

இலங்கையில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு வந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 6 ஆயிரம் என்று அகதிகள் மறுவாழ்வு அலுவல்கள் இணைப்பதிகாரி சி. எம். இராம்தாஸ் சொன்னார்.

இலங்கைப் பணத்தை இந்தியப் பணமாக மாற்ற இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள், தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

80 ஆயிரம் தமிழ் அகதிகள் தங்கக்கூடிய வகையில் இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் 20 ஆயிரம் குடில்கள் கட்டப்பட்டுவிடும் என்றும் திரு. இராம்தாஸ் சொன்னார். [இ-எ]

# வடக்கு, கிழக்கில் அகதிகள் 12 லட்சத்து 84 ஆயிரம் பேர்!

கொழும்பு, செப்.10

கடந்த வெள்ளிக்கிழமை வரை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து அகதிகளானவர்களின் எண்ணிக்கை 12 லட்சத்து 84 ஆயிரத்து 121 என்று புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி ஒருவர் கொழும்பில் தகவல் வெளியிட்டார்.

இதே வேளை—

வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் அகதிகளானோர் எண்ணிக்கை 7 லட்சத்து 62 ஆயிரத்து 465 என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# 15 கிலோ தங்கத்துடன் 4 இலங்கையர் கைது!

சென்னை, செப். 10

இலங்கைப் பணத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியான 15 கிலோ எடையுள்ள இருபது தங்க பிஸ்கட்டுக்களைத் தூத்துக்குடி சுங்க அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை கைப்பற்றினர்.

இது தொடர்பாக நான்கு இலங்கைப் பிரசைகள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கடல் ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, நாட்டுப்படகு ஒன்றை மறித்து நடத்திய விசாரணையில் இலங்கையில் இருந்து கடத்தல் தங்கத்துடன் விரைவுப்படகு ஒன்று வரும் தகவல் வெளியானது என்றும்—

அதனைத் தொடர்ந்து, விரைவுப்படகை காத்து இருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செய்திச் சாரம்

### படையினர் ஐவர் கால் இழந்தனர்

யாழ்ப்பாணம், செப். 10

கடந்த சனியன்று முல்லைத்தீவு முகாமிலிருந்து சிலாவத்தை நோக்கி முன்னேறிய இராணுவத்தினர் கள்ளப்பாட்டிற்கும் சிலாவத்தைக்கும் இடையில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கினர்.

இதனால் படையினர் ஐந்து பேர் கால்களை இழந்தனர். (உ)

### 3 தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், செப். 10

நேற்று முன்தினம் புல்லுமலை இராணுவத்தினர் ஆறு தமிழ்ப்பொதுமக்களைக்கைது செய்து முகாமுக்குக்கொண்டு சென்றதாகவும்—

அவர்களில் மூன்றுபேர் வழியில் தப்பிஓடிவிட்டதாகவும்—

மிகுதிமூன்று பேரும் இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

### முல்லைத்தீவில் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், செப். 10

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து கண்டாவளைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் ஷெல் வீச்சு நடைபெற்றது.

கண்டாவளை மணற் பகுதியில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்தன. (உ-6-5)

### யாழ். நகரில் வெளிநாட்டு பத்திரிகையாளர்

யாழ்ப்பாணம், செப். 10

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மூவர் நேற்று யாழ். நகருக்கு வந்திருந்தனர்.

இவர்கள் இந்தியா, இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் ஆவர்.

பிரஸ்தாப மூவரும் நேற்று மாலை மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தனர். அங்கு நோயாளர்களைப் பார்வையிட்டு, அவர்களைப் படம் எடுத்துக்கொண்டனர்.

குண்டு வீச்சுகளால் சின்னாபின்னமாகிக் கிடக்கும் நகரின் பல பகுதிகளையும் பார்வையிட்டு, அந்தப் பகுதிகளையும் அவர்கள் படம் எடுத்தனர். (ஒ-5)

### மற்றும் ஒரு கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், செப். 10

கொழும்பில் இருந்து 2600 தொன் உணவுப்பொருள்களுடன் ''லங்கா சிறி'' என்னும் கப்பல் பருத்தித்துறைக்கு வரஇருக்கிறது.

பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்கிவரும் ''வெல்கம் றேடர்'' என்னும் கப்பல் இன்று புறப்பட இருக்கிறது. (இ-3)

### நேற்று பரவலாக ஹெலித் தாக்கு

திருநெல்வேலி, செப்.10

கோண்டாவில், இணுவில், மருதனாமடப் பகுதிகளில் நேற்றுக் காலை 8 மணியளவில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது.

நேற்றுப்பகல் 12. 10 மணி [illegible] கட்டைப்பிராய் இருபாலைப் பகுதிகளிலும் [illegible] தீர்த்து விட்டுச் சென்றது. (ஒ-143)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரிப் பகுதியில் குத்திப் பதிந்த பொம்மர்!

யாழ்ப்பாணம், செப்.10

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பொம்மர் ஒன்று குத்திப் பதிந்து மக்களைக் கிலி கொள்ளச் செய்தது.

வைத்தியசாலைக்கு வந்திருந்த நோயாளர்கள், மற்றும் ஊழியர்கள் பெரும் பதற்றமடைந்தனர். சிலர் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சிதறி ஓடினர்.

ஏற்கனவே ஆஸ்பத்திரி மீது நான்கு தடவைகள் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதும்—

அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ''இனி ஆஸ்பத்திரி மீது தாக்குதல் நடத்தப்படமாட்டாது'' என உறுதியளித்திருந்ததும் தெரிந்தவையே. [ஒ-3]

# பீரங்கிப் படகிலிருந்து தாக்கு

யாழ்ப்பாணம், செப். 10

சனிக்கிழமை மாலை ஐந்து மணி அளவில் பாசையூர் கடல் பகுதியில் நிற்கும் பீரங்கிப் படகில் இருந்து ஏவப்பட்ட குண்டுகள் சுண்டிக்குளி பழைய பூங்கா வீதி, பிரதான வீதிப் பகுதி ஆகியவற்றில் வீழ்ந்து வெடித்தன. [இ-7]

# முஸ்லிம் ஊர்காவலர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 10

மட்டக்களப்பு மீராசேனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முஸ்லிம் ஊர்காவல் படையினர் மீதுபுலிகள் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தாக்குதலை அடுத்து முஸ்லிம் ஊர்காவலர்கள்சிதறி ஓடி விட்டனர். அவர்கள் கைவிட்டுச் சென்ற எம்.70 ரக துப்பாக்கி ஒன்று புலிகளால் மீட்கப்பட்டது. [ஒ]

# உணவு லொறி மீது சூடு!

கோப்பாய், செப், 10

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டுவந்த ப.நோ.கூ. ச. லொறி ஒன்றை நோக்கி நேற்று நண்பகல் 12-30 மணியளவில் ஹெலி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அதன்விளைவாக ஆலை, கடை ஆகியவற்றின் ஓடுகள் சேதமடைந்தன.

கடையொன்றில் அமர்ந்து குழந்தைக்குப் பாலூட்டிய தாய் மயிரிழையில் உயிர்தப்பினார். இவர் இருந்த கதிரைக்கு மிக அருகில் சன்னம் விழுந்தது

இலக்கு வைக்கப்பட்ட லொறிக்கும் அதில்பிரயாணம் செய்தவர்கட்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை.

# குண்டுவீச்சில் காயமுற்றோர்

யாழ்ப்பாணம், செப். 10

அரசடிவீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில் நேற்றுக்காலைஇடம்பெற்றபொம்மர் தாக்குதலில் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த குழந்தைவேலு சிவசம்பு (வயது 40), ஜெயந்திபாலசுந்தரம்பிள்ளை (வயது 18), ஏ. செந்தில்லிங்கம் (வயது 43), ஆர். இராஜநாதன் (வயது 21] ஆகியோர் காயமடைந்தனர்.

ஞாயிறு அதிகாலை யாழ் நகரில்-ஸ்ரேசன்வீதிப் பகுதியிலும் குண்டுவீச்சு இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த எஸ். பத்மராஜா (வயது 46)என்பவர்காய முற்றார். [ஒ 5]

# ★ யாழ் நகர தபால்கள்

கப்பல்களில் வந்து சேர்ந்த தபால் பொதிகள் தரம்பிரிக்கப்பட்டு — யாழ். நகரத்துக்கு உட்பட்ட தபால்கள் நேற்றிரவு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுன்னாகம் தபாலதிபர் திரு. இ. திருநாவுக்கரசு இவற்றை ஒப்படைத்தார்.

கப்பலில் வந்த தபால் பொதிகள் சுன்னாகம் தபாலகத்தில் வைத்தே தரம்பிரிக்கப்பட்டன என்பது தெரிந்ததே. பிரஸ்தாபதபால்களை இறுதித் தரம்பிரிக்கும் வேலைகளைச் செய்வதற்காக தபால் ஊழியர்களை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு இன்று தவறாது சமுகம் தரும்படி தபால் அத்தியட்சகர் திரு. எஸ்.எம். சேதுகாவலர் கேட்டுள்ளார். (ஒ-3)

## வீரமரணம்

மட்டக்களப்பு, கிண்ணியடியில் கடந்த 5ஆம் திகதி பொறிவெடியில் தவறுதலாக சிக்கிய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பழனி என்பவர் வீரமரணம் அடைந்தார். (ஒ)


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பரமேஸ்வரன்

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம், வள்ளிநாயகி ஆகியோரின் மூத்த புதல்வரான பரமேஸ்வரன் [R.T.,D Bank Manager National Saving BanK, Kilinochchi] நேற்றுஅகால மரணமானார். இவர் காலஞ்சென்ற ரி. என். லிங்கத்தின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும். மஞ்சரி. தரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.9 90 காலை 9 மணியளவில் வட்டுககோட்டை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
எஸ்.பி. சிறீபாலமோகன்

A.S. நடராசா,
கண்ணகை அம்மன்
கோவிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

[1385z]